Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி: எண் 49

மலர் 6 யாழ்ப்பாணம் சோபகிருது பங்குனி 18 ஆம் நாள் துல்கஃதா 16 (31-3-64) செவ்வாய்க்கிழமை இதழ் 50

ஈழநாடு
சந்தா விபரம்

இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 1-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

# கொழும்பு துறைமுகத்தில் துணிகர திருட்டு!

## ரூ. 1 லட்சம் பெறுமதியான பொருள்கள் அகற்றப்பட்டன

கொழும்பு, திங்கள்

கொழும்புத் துறைமுகத்திலுள்ள சரக்குக் குதத்திலிருந்து ஒரு லட்சம் ரூபாவுக்கு அதிகமான பெறுமதியான சிகரெட், துணி வகைகள் அதிகாலையில் திருடப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. திருடர்கள் குதத்தை உடைத்து உள் நுழைந்து அங்கிருந்து இப் பொருள்களை லொறி மூலமாக கடத்திச் சென்றதாக சந்தேகிக்கப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாகப் பொலிஸார் புலன்விசாரணை நடத்தி வருகின்றனர்.

வடபகுதி அசைஸ்

## நீதிமன்றத்தில் சாட்சி மயங்கி விழுந்தார்

### ஊரணி கொலை முயற்சிவழக்கு விசாரணையில் சம்பவம்

யாழ்ப்பாணம், செவ்.

'ஊரணி கொலை முயற்சி வழக்கு நேற்றுக் காலை இரண்டாவது தினமாக தொடர்ந்து, நீதியரசர் டாக்டர் ஏச். டபிள்யூ. தம்பையா கியூ. சி. முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது காயமடைந்த நா. வயிரமுத்து என்பவர் கூண்டில் மயங்கி விழுந்ததை தொடர்ந்து, நீதியரசர் விசாரணையை இன்று காலை 9-30 மணிவரை ஒத்திவைத்தார்.

உண்மையை பேசினால் தான் நீதிசெலுத்த முடியுமெனக் கூறி காயமடைந்தவர் பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தை படித்துக் காட்டி, இதில் கூறப்பட்டவை சரியா? என்று நீதியரசர் கேட்டபொழுது சாட்சியாகிய வயிரமுத்து, மயங்கி விழுந்தார். சிறிது நேரம் சென்றபின் மயக்கம் தெளிந்ததும், கதிரையிலிருந்து சாட்சியமளிக்க நீதியரசர் சாட்சிக்கு அனுமதியளித்தார். கதிரையிலிருந்த பொழுது சாட்சி மீண்டும் மயக்கமடையவே இவ்வழக்கில் சாட்சியமளிக்கவந்த டாக்டர் குகநாததாசன், சாட்சியைப் பரிசோதனை செய்து மயக்கமடைந்தவர் சாட்சியமளிக்ககூடிய நிலையிலில்லையென நீதியரசரிடம் தெரிவித்ததை தொடர்ந்து விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

சாட்சி டாக்டரால் பரிசோதனை செய்யப்பட்ட பின் யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப் பட்டார்.

இவ்வழக்கில் காங்கேசன் துறைப் பகுதியைச் சேர்ந்த ஊரணியில் 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ம் திகதி வி. நடராசா, வி. செல்லையா, எஸ். செல்லத்துரை, எஸ். கணபதிப்பிள்ளை ஆகிய நால்வரும், நாராயணபிள்ளை வைரமுத்து என்பவரை கொலை செய்ய முயற்சித்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

நான்கு எதிரிகள் சார்பிலும் வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் திரு. ரி. தம்பிரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். முடிக்குரியதரப்பில் திரு. ஏ. ஏ. டி. சில்வா வழக்கை நடத்தினார்.

## உயிர்ப் பலி கொடுக்கப்படவில்லை

யாழ்ப்பாணம், செவ்.

சுன்னாகம் ஐயனார் கோயிலில் உயிர்ப் பலி கொடுக்கப்படவில்லையென்றும் வேறு எங்கோ ஒரு இடத்தில் ஒரு ஆட்டை வெட்டிவிட்டு அதை கோயிலுக்கு அருகில் சிலர் வீசி விட்டுச் சென்றதாகக் கூறப்படுகிறது.

கோயிலில் உயிர்ப் பலி கொடுக்கப்படவில்லையென்று சுன்னாகம் பொலிசைச் சேர்ந்த அதிகாரியொருவரும் தெரிவித்தார்.

## எம். பி. வாக்குறுதி

காங்கேசன் துறை, திங்கள்

காங்கேசன் துறை நடேஸ்வராக்கல்லூரி பழைய மாணவர்கள் கோஷ்டியொன்று நேற்று திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தை சந்தித்து பாடசாலையின் முக்கிய தேவைகள் பற்றி பேச்சுக்கள் நடத்தியது. பாடசாலையின் தேவைகளுக்காக அரசாங்கத்திடமிருந்து 5000 ரூபா நன்கொடைப்பணமாக பெற்றுத் தரவேண்டுமென்றும் அவர்கள் கேட்டுக்கொண்டனர். உப அதிபர் திரு. அ. சோமசுந்தரம் தலைமையில் சென்ற இத் தூதுக்குழுவின் கோரிக்கைகளை தாம் ஏற்றுக்கொள்வதாகவும் இதுசம்பந்தமாக கல்வி இலாகாவுடன் தாம் பேச்சு நடத்துவதாகவும் திரு. செல்வநாயகம் வாக்களித்துள்ளார்.

## "முதலீட்டுக்கான விபரம் தருக"

கொழும்பு, திங்கள்

இரண்டாவது மூன்றாண்டுத் திட்டம் ஒன்றைத் தயாரித்து வரும் தேசிய திட்ட இலாகா எல்லா இலாகாக்களையும், கூட்டு ஸ்தாபனங்களையும் அபிவிருத்திக்கான முதலீடு, செலவு, வேலை வாய்ப்பு, சம்பளம், லாபம் ஆகியன பற்றிய புள்ளிவிபரங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டிருக்கிறது.

## துணை பிரதமர் நியமனபிரச்னை இன்னும் தோன்றவில்லை"

### சாஸ்திரியின் திறமையான சேவைக்கு நேரு பாராட்டு

புதுடில்லி, மார்ச் 30

இந்தியாவுக்கு துணைப் பிரதமர் ஒருவரை நியமிக்கும் பிரச்னை இன்னும் தோன்றவில்லை என்றும், இதுவரை தமக்கு அந்த யோசனை ஏற்படவில்லை என்றும் பிரதமர் நேரு லோகசபையில் கூறினார். அவரது உடல் நலம் பற்றிக் கேட்கப்பட்டதற்கு, தமது தேக நிலைமை பெருமளவு அபிவிருத்தியடைந்திருப்பதாய் கரகோஷத்தினிடையே தெரிவித்தார்.

"பளுவான பல அலுவல்களை பிரதம மந்திரி கவனிக்க வேண்டியிருக்கிறது என்பது உண்மையே. இந்த அலுவல்களை தற்போது திரு. லால் பகதூர் சாஸ்திரி மிகத் திறமையாகச் செய்து வருகிறார் அவர் மிகப் பலனுள்ள பணிகளை ஆற்றி வருகிறார். அவருக்கு மிகவும் நன்றி செலுத்துகிறேன். எனினும் இந்த ஏற்பாடு நிரந்தரமாக இருந்துவர முடியாது" என்றும் நேரு கூறினார்.

பல விஷயங்களை திரு. சாஸ்திரி பைசல் செய்து வருகிறார் என்றும், அவசியமானால் பிரதமர் நேருவின் கட்டளையை அவர் பெறுகிறார் என்றும், இலாகா இல்லாத மந்திரி திரு. சாஸ்திரிக்கு பிரதமரின் கடமைகளைக் கவனிக்கத் தனி ஊழியர் இல்லை என்றும் ஸ்ரீமதி லக்ஷ்மிமேனன் மற்றோர் கேள்விக்குப் பதிலளித்தார்.



பிரதமர் நேரு, தமது உடல் நிலை பெருமளவுக்குத் தேறி விட்டதாகக் கருதுவதாய்க் குறிப்பிட்டபோது சபையின் எல்லாப் பகுதிகளும் கரகோஷம் செய்தன.

## 'ஸ்ரீ' பிரச்னைக்கு சுமுகமான தீர்வுகாண முயற்சி

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணத்தில் பஸ் போக்குவரத்துச் சேவை மிக மோசமாகவிருப்பதற்கு சிங்கள ஸ்ரீ பிரச்னை ஒன்றுதான் முக்கிய காரணமாக விருப்பதால் இப் பிரச்னைக்கு சுமுகமான தீர்வு காணும் பொருட்டு தமிழரசுக் கட்சித் தலைவர்கள், அரசாங்கப் பிரதிநிதிகள், இலங்கை போக்குவரத்துச் சபை அதிகாரிகள் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்த உத்தேசித்திருப்பதாக வடபகுதிக்கு விஜயம் செய்து போக்குவரத்துக் கஷ்டங்கள் பற்றி ஆராய்ந்த அகில இலங்கை பகிரங்க போக்குவரத்து பிரயாணிகள் சங்கத்தின் தலைவர் திரு. பி. டி. அபயபாலாவும் காரியதரிசி ஏ. யூ. யேசுதாசனும் தெரிவித்தனர்.

வடபகுதியில் பஸ், ரயில்வே பிரயாணிகளின் கஷ்டங்கள், குறைகள்பற்றி ஆராய்ந்த இவர்கள் பஸ் பற்றாக்குறையே இங்குள்ள முக்கிய பிரச்னையென்று அறிந்ததாகத் தெரிவித்தனர்.

தென்னிலங்கையில்

(6-ம் பக்கம் பார்க்க)

## மாநகரசபை அங்கத்தவர் மீது 'வாரண்ட்' பிறப்பிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணம் மாநகரசபையில் அங்கத்தவர்களாகப் பதவி வகித்த காலத்தில் மேலதிகமாக 4905 ரூபாய் சபையின் பணத்திலிருந்து செலவுசெய்ததாகவும் இத்தொகையை சபைக்குச் செலுத்தத்தவறியதால் சம்பந்தப்பட்ட அங்கத்தவர்கள் பிரஸ்தாப பணத்தைச் சபைக்குச் செலுத்தவேண்டுமென உத்தரவிடக்கோரி யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் கோர்ட்

(5-ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

பாபப் பழக்கங்கள் எதுவும் திருவருள் உதவியின்றி நீங்க முடியாது. விருப்பங்கள் தாம் பழக்கங்களை உருவாக்குகின்றன. மனவிருப்பங்களை மாற்றவல்லது தெய்வ சக்தியே.

— பிஷப் புல்டன்ஷின்

ஈழநாடு
EELA NADU

EELA NADU National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சோபகிருது ஆண்டு
பங்குனி ீ 18 உ (31-3-64)

## தமிழரசுக் கட்சி தீர்மானம்

தமிழரசுக்கட்சியின் செயற்குழு நிறைவேற்றியுள்ள பல தீர்மானங்கள் இன்றைய நெருக்கடியைக் குறைப்பதற்கு அரசாங்கத்துக்கு நல்ல வாய்ப்பு இருக்கிறதென்பதை எடுத்துக் காட்டுகின்றன.

தமிழ்பேசும் அரசாங்க ஊழியர்களுக்கு அனுப்பப்படும் கட்டாயஓய்வு உத்தரவுகள் நிறுத்தப்பட வேண்டுமென்றும் தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்ட கட்டாயஓய்வு உத்தரவுகள் வாபஸ் பெறப்பட்டு அரசாங்கததின் மொழிக்கொள்கையின் விளைவாக கட்டாய ஓய்வினால் பாதிக்கப்படும் சகல உத்தியோகத்தர்களையும் மீண்டும் சேவையில் அமர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் தமிழரசுக் கட்சியின் செயற்குழு தனது தீர்மானத்தில் தெரிவித்துள்ளது. இது சம்பந்தமான பிரச்னைகளில் அரசாங்கம், சந்தேகமெதுவுமின்றி தனது நல்லெண்ணத்தை தெளிவாகச் செயல் மூலம் காட்டும்வரை அரசாங்கத்துடன் எந்தவிதமான பேச்சுவார்த்தைகளிலுமோ அல்லது உடன்பாடுகளிலுமோ கட்சி கலந்து கொள்ள மாட்டாதென்றும் செயற்குழு திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறது.

தமிழ் உரிமைக்காக நேரடி நடவடிக்கையிலிறங்கப் போவதாக பல மாதங்களுக்கு முன்னரே இக்கட்சி தீர்மானித்து அதற்கான ஆயத்தங்களையும் செய்து வந்ததுடன் பிரதமருக்கும் முன்னறிவித்தல் கொடுத்திருந்தது. அரசாங்கம், இறுதி நேரத்தில் எப்படியோ சமரச பேச்சு என்ற முயற்சியின் மூலம் போராட்டத்தை நிறுத்தச் செய்து மீண்டும் நெருக்கடி ஏற்படாமல் தவிர்த்துக்கொண்டது. நல்லெண்ண சூழ்நிலையை ஏற்படுத்தவும், மொழிப்பிரச்னைக்கு சுமுகமான தீர்வு காணவேண்டுமென்ற தனது ஆவலைத் தெரியப்படுத்தவும், கட்சிக்குள் தோன்றிய எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் போராட்டத்தை அவர்கள் ஒத்தி வைத்தனர். ஆனால் நீட்டிய நேசக்கரத்தையும் உதறியெறிவதுபோல் அரசாங்கம் தமிழ் பேசும் அரசாங்க ஊழியர் விஷயத்திலும் சிங்கள அமுல் கொள்கையிலும் நடந்துகொள்கிறது. இந்நிலையில் இடதுசாரிக்கட்சிகளினதும் தமிழரசுக்கட்சியினதும் ஆதரவை பெற்று எஞ்சியுள்ள ஆட்சிக்காலத்தை ஓட்டுவதற்கு அரசாங்கம் முயற்சி செய்து வருவதாகக் கூறப்படுகிறது. இச்சமயத்தில் தான் தமிழரசுக்கட்சியின் செயற்குழு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் உடன்பாடுகளில் கலந்து கொள்வதற்கும் நிபந்தனை விதித்துள்ளது. தமிழரசுக் கட்சியின் இந்த நிபந்தனைத் தீர்மானங்களை மிகை என்று யாரும் கூறுவதற்கில்லை.

சென்ற பொதுத்தேதர்லுக்கு முன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் தமிழரசுக்கட்சிக்கும் மொழிப்பிரச்னையில் சிலஉடன்பாடு இருந்ததாக திரு. செல்வநாயகம் பார்லிமெண்டில் கூட பகிரங்கமாகத் தெரிவித்திருக்கிறார். அந்த வாக்குறுதியை மீறி நடந்துகொண்டதாலேயே அரசாங்கத்துக்கு மேலும் மேலும் சோதனைகளேற்படுகின்றன. முன்னர் செய்த தவறைத் திருத்திக் கொள்ளவும் தேசிய நெருக்கடியைக் குறைத்துக்கொள்ளவும் அரசாங்கத்துக்கு இப்போது நல்ல வாய்ப்பாகும். இந்த நல்ல சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் தமிழ் அரசாங்க ஊழியர் விஷயத்தில் நியாயமாக நடந்துகொண்டு அதன் மூலம் தமிழரசுக்கட்சியைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்து மொழிப்பிரச்னையில் சுமுகமான தீர்வுகாணவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. இனியும் இவ்விஷயத்தில் தாமதம் செய்வது அரசாங்கத்துக்கோ நாட்டுக்கோ நிச்சயம் நல்லதல்ல. ஜனநாயகத்தைப் பாதுகாப்பதாக உறுதிகூறியுள்ள பிரதமர், சிறுபான்மையினரின் குறைகளை நீக்கி அதன்மூலம் அவர்களது ஆதரவையும் பெற்று ஜனநாயகத்தைப் பேணிக்காக்க இது நல்ல தருணமாகும். அரசாங்கத்தின் அந்தரங்கசுத்தியையும், நல்லெண்ணத்தையும் இதனால் நிரூபிக்கலாம்.

# "ஈழத்தில் நாடக கலைக்கு மகத்தான தொண்டுபுரிந்தவர்"

## கலையரசு பிறந்ததின விழாவில் கலாநிதி வித்தியானந்தன் புகழ்மாலை

நல்லூர், செவ்வாய்

'இன்று ஈழத்திலே நாடகத் துறையில் விழிப்பும் எழுச்சியும் காணப்படுகின்றன. அந்நிய ஆட்சி நீக்கப்பட்டு மக்களாட்சி நிலவும் இக்காலத்தில் இத்தகைய உணர்ச்சி காணப்படுவது இயல்பே. ஆனால் கலையரசு, நாடகத்தில் இறங்கிய காலத்தில் இத்தகைய சூழ்நிலை நிலவவில்லை. நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும் அற்ற ஒரு சூழலிலேதான் அவர் பணி தொடங்கிற்று. அக்காலத்தில் நாடகத்தில் பங்குபற்றுவது மிகவும் இழிவாகக் கருதப்பட்டது' என்று இலங்கை கலைக்கழக தமிழ் நாடகக் குழுத் தலைவர் கலாநிதி சு. வித்தியானந்தன் மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் 'கலையரசு' பிறந்ததின விழாவிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினர்.

யாழ். மறுமலர்ச்சி மன்றத்தினர் மானிப்பாய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடத்திய கலையரசு சொர்ணலிங்கத்தின் 75-வது பிறந்ததின விழாவிற்கு தலைமைவகித்துப் பேசிய கலாநிதி வித்தியானந்தன் மேலும் கூறியதாவது:-

பெரியார்களை அவர்கள் ஆற்றிய அரிய தொண்டிற்காகப் பாராட்டுதல் தனக்குப் பிடித்ததோடு வழிபாட்டு முறைமையெனப் பகவான் பகவத்கீதையில் மொழிகின்றார். பாராட்டுவிழா தெய்வீகத் தன்மைபெற்றது. இறைவனை வழிபடுதற்கு நிகரானது. கலையரசு சொர்ணலிங்கத்தைப் பொறுத்தவகையில் நாட்டிலுள்ள எல்லா மக்களது மதிப்பிற்கும் பாராட்டிற்கும் உரிய அரிய குணங்களை அவரிடம் காண்கின்றோம். அவர் ஒரு பெரிய கலைஞானி. அவரது பணிவும் அடக்கமும் சால்பும் அவரை எமது மதிப்புக்குரியவராக்குகின்றன. ஆடம்பரமற்ற வாழ்க்கையும், காட்சிக்கு எளிமையும், தன்னலமற்ற சிறந்த சேவையும், பண்பாடான நடத்தையும் அவரை இந்நாட்டின் விலை மதிக்கமுடியாத கலைப்பொக்கிஷமாக்கிவிட்டன. அத்தகைய ஒரு பெரியாரை, சமூகத் தொண்டனை, மக்கள் கலைஞனை பாராட்ட விழா எடுத்திருப்பது பாராட்டுதற்குரியது.

### நாடக கலைக்கு மகத்தான தொண்டு

நடிகர் கூத்தாடிகள் என ஏளனமாகக்குறி சூட்டப்பட்ட காலம் அது. இதனால் படித்தவர்கள் நாடகத்தில் ஈடுபடாமல் இருந்தனர். பரதநாட்டியம் கற்று மேடையில் நடனமாடினால் கலியாணம் விரைவில் நடைபெறுமெனக் கருதிய பெற்றோர் தமது பெண்களை நாடகத்தில் நடிக்கவிட்டால் மானம் போனதாகக் கருதிய காலம் அது. நாடகத்திற்கு விமோசனம் இல்லை என்று தோன்றிய அக்காலத்திலே படித்தவர்கள் நடித்தால்தான் அக்கலை திருந்தியதொரு கலையாக அமையுமென்பதனை உணர்ந்த கலையரசு துணிவுடன் நாடகத்தில் நடிக்க முன்வந்தார். அதோடு நின்றுவிடாது படித்தவர் இன்னும் பலரை ஒன்று கூட்டி இலங்கைச் சுபோத விலாச சபையை அமைத்து அவர்களின் துணைகொண்டு பல நாடகங்களை அரங்கேற்றினர். எனவே தமக்குச் சார்பற்ற சூழ்நிலையில் நாடகச் சபையின் உறுப்பினராக இருத்தலே மானக்கேடு எனக் கருதப்பட்ட அக்காலத்தில், இந்நாடக சபையை நிறுவி அயராத முயற்சியினால் நாடகத்திற்கு ஓர் அந்தஸ்தைத் தேடிக்கொடுத்த இக்கலைஞரின் தொண்டு மிக மிக மகத்தானது.

கலையரசு, நாடகத்தில் முதன் முதலாகத் தோன்றிய காலம் 1901-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் திகதியாகும். லோகதாசன் என்ற பாத்திரத்தை ஏற்று நடித்த அன்று தொடக்கம் இன்றுவரை 63 ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக நடித்துவந்த பெருமை இவருக்கேயுரியது. 63 ஆண்டுகள் உயிருடன் வாழ்வதே அருமையாக உள்ள இக்காலத்தில் 63 ஆண்டாக மேடையிலே தோன்றி நடித்தாரென்றால் அது ஒரு அரும் பெருஞ் செயலாகும். ஈழத்தில் நாடகத்துறையில் இதுவரை எவரும் சாதிக்காத சாதனையாகும். பொறாமை, நிந்தனை, பணச்செருக்கு, எதிர்பாராத இடையூறுகள் முதலியவற்றிற் சிக்குண்டு தளர்ச்சியுற்றுத் தமது பணியைக் கைவிடாது இவையாவற்றையும்சமாளித்து மன உறுதியுடன் தம் குறிக்கோளிலே சற்றேனும் தளராது உழைத்துவந்திருக்கின்றார்.

நாடகத்தை தமது மூச்சாகக்கொண்டு ஓயாது உழைத்த கலையரசு, தத்தம், கூனி, பரதன் மனோகரன், ஷைலக், சித்திரசேனன் செம்படவன் சின்னக்குட்டி முதலிய குணசித்திர பாத்திரங்களை ஏற்று சிறப்பாக நடித்துவந்திருக்கின்றார். இவர் ஒரு பாத்திரத்தில் நடிப்பதில்லை; அப்பாத்திரமாகவே மாறிவிடுவார். இதனாலேயே இவர் நடித்த பாத்திரங்கள் சிரஞ்சீவித்துவம் பெற்றன. எந்தப்பாத்திரத்தை ஏற்றாலும் அதற்குரிய குணங்களைப் பல துறைகளிலுமிருந்து ஆராய்ந்து அறிந்து அவற்றிற்கேற்ற ஒப்பனை செய்து உடையணிந்து, பொருத்தமான குரலில் பேசி நடித்து வந்தமையாலேயே ஈழத்தின் தலைசிறந்த குணசித்திர நடிகரென இவர் கணிக்கப்படுகின்றார்.

ஒரு நடிகனுக்கு மூன்றுவித சக்தி இருக்கவேண்டியது முக்கியம். முதலாவதாக ஒன்றைக் கண்டாலும்சரி, ஒன்றைக் கேட்டாலும்சரி அதனை உடனே கிரகித்துக்கொள்ளவேண்டும். இரண்டாவதாக கிரகித்துக் கொண்டதை நன்றாக மனதில் பதியவைத்துக்கொள்ளல் வேண்டும். மூன்றாவது மனத்திற் பதியவைத்துக்கொண்டதைத் தக்க சமயத்தில் எடுத்து சொல்லதைரியமும் தன்னம்பிக்கையும்வேண்டும் இவ்வாற்றல்கள் கலையரசுசொர்ணலிங்கத்திடம்நிறையக் காணப்படுகின்றது. கம்பீரமான தோற்றமுடைய கலையரசு கலைக்காகத் தம் வாழ்நாளை அர்ப்பணித்தவராவர். தென்னகத்தில் உள்ளவரும் மேனாட்டவரும் உட்பட தலைசிறந்த நடிகரெனத் தலை குனிந்தது ஈழத்திலே இக் கலைஞர் ஒருவருக்கே

### சிறந்த நாடகங்களை தயாரித்தவர்

கலையரசு எண்ணற்ற நாடகங்களில் நடித்ததுமன்றி 500க்கு மேற்பட்ட நாடகங்களைத் தயாரித்து மளித்திருக்கின்றார். நடிகரின் பேச்சு, பாட்டு, ஒப்பனை நடிப்புத்திறன் முதலியவற்றிற் சிறிது குறை காணப்பட்டாலும் நாடகத்தை அரங்கேற்றமாட்டார். மாதக்கணக்கான ஒத்திகைக்குப்பின்னரே இவருடைய நாடகங்கள் அரங்கேறும். அதனாலேயே இவர் தயாரித்த நாடகம் ஒன்றாயினும் இதுவரை தோல்வியடையவில்லை. இவர் நாடகத்தை

(5-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

இலங்கையில் கூட்டு மந்திரிசபை ஏற்படப்போகிறதா இல்லையா? கொழும்பு ஹைட் பார்க் கூட்டத்திலே டட்லி பேசியிருப்பதைப் பார்க்கையில் இடதுசாரி ஐக்கிய முன்னணி சில நிபந்தனைகளுடன் சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து கூட்டு மந்திரிசபை அமைப்பதற்கான 'சான்ஸ்' இருப்பதாகவே தோன்றுகின்றது.

இம்மாதம் 14-ந் திகதி டாக்டர் என். எம்., பிரதமரைக் கண்டு பேசியுள்ள ரகசியத்தை டட்லி அம்பலப்படுத்தினர். பார்லிமெண்ட் சபையை 4 மாதங்களுக்கு ஒத்திவைத்ததைக் கண்டிப்பதாக முதலில் கூறிய என். எம்., பின்னர் இதைப் பற்றித் தமது கட்சியின் நிர்வாகசபை யோசித்து வருவதாக மழுப்பிவிட்டாராம். அவரது இந்த மனமாற்றத்தை யு. என். பி. தலைவர்கள் சுட்டிக்காட்டினர்கள்.

* * *

நுவரேலியாவிலே ஒரு கூட்டத்தில் பிரதமர் சிறிமா பேசுகையில், டட்லியைக் காரசாரமாகவும் கிண்டலாகவும் தாக்கியுள்ளார். (வேறுயாரோ எழுதிக்கொடுத்தபடியே அவர் இப்படிப் பேசியிருக்கவேண்டுமென்கிறார் ஓர் அன்பர்) இது எப்படியாயினும், டாக்டர் என். எம்., பிலிப் முதலிய இடதுசாரிகளைப் பற்றி பிரதமரின் பேச்சில் ஒன்றுமில்லை. அவர்களும் கூட, சர்வாதிகார ஆட்சி ஏற்படலாமென்று கால்பேஸ் பகிரங்கக் கூட்டத்தில் கண்டித்தது குறிப்பிடத்தக்கது.

பிரதமர் அவ்விடதுசாரித் தலைவர்களை விட்டுவிட்டு ஏன் டட்லியை மட்டும் தாக்கவேண்டும்? டட்லியின் பேச்சைக் கேட்டபின், இலங்கையில் சர்வ கட்சி தேசிய அரசாங்கம் ஏற்படுவது இனி முடியாதென்பது தெளிவாகிவிட்டது. இடதுசாரிகளின் ஒத்துழைப்பைப்பெற பிரதமர் இப்போது முயற்சிக்க முக்கிய காரணங்கள் உண்டு. இன்றைய பொருளாதாரப் பிரச்னையைத் தீர்க்கமுடியாமல் அரசாங்கம் சங்கடப்படுகிறது. டாக்டர். என். எம்.மை நிதிமந்திரியாக்கினல் இப்பொறுப்பு அவர் தலையில் அமரலாம்.

இன்னும்ஒருவருடத்தை எப்படியோ ஓட்டிவிட்டாலும் பொதுத்தேர்தல் பிரச்னை காத்துள்ளது. அதில் இடதுசாரிகளுடன் மீண்டும் போட்டியில்லா ஒப்பந்தம் செய்தால் தான் தங்களுக்கு மீண்டும் ஒரு சான்ஸ் உண்டென்றும், இல்லாவிட்டால் யு. என். பி. வெற்றிபெறலாமென்றும் சுதந்திரக்கட்சிகு ஒரு பீதி இருப்பது இயற்கை. இடதுசாரி ஐக்கிய முன்னணிக்கும் இதே பீதி ஓரளவு இருக்க நியாயமுண்டு. ஆகவே வரும் பொதுத்தேர்தலை முன்னிட்டும், இவ்விரு கட்சிகளும் கூட்டு ஆட்சியை, 'சாகிற காலத்தில் சங்கரா' என்பது போல் அமைக்கமுற்படலாமென்றும் சொல்லப்படுகின்றது.

* * *

தங்களுக்கு இதுவரை அழைப்பில்லை என்கிறது தமிழரசுக்கட்சி. கூட்டு மந்திரிசபையில் தமிழரசுக் கட்சியைச் சேர்த்துக்கொள்வதால் ஏற்படும் சாதகபாதகங்களைச் சுதந்திரக் கட்சியினர் நன்கு யோசிப்பர். சேர்த்துக்கொண்டால் வெளிமடையர் முதலிய வகுப்பு வெறியாளரின் பெரும் எதிர்ப்பு ஏற்படக்கூடும். இந்த எதிர்ப்பை விலைக்கு வாங்க அரசாங்கக் கட்சி முன்வராது.

தமிழரசுக் கட்சியினரும், தங்கள் பல நிபந்தனைகளையும் நிறைவேற்றினல் தான் ஒத்துழைக்க முடியுமென்றும் அறிவித்துள்ளனர்.

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

ஆனல் மொழி முதலிய பிரச்னைகளில் இடதுசாரிகள் தமிழருக்கு நியாயம் வழங்க வேண்டுமென்று கேட்டுவருவதால், தமிழரசுக் கட்சியை கூட்டுமந்திரிசபையில் சேர்க்காவிடினும் இவ்விஷயமாக சில நல்ல மாறுதல்களும் சூழ்நிலையும் ஏற்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கூட்டு மந்திரிசபைப் பேச்சுகள் வெற்றிபெறின், பார்லிமெண்ட் சபை இன்னும் சில வாரங்களில் கூடி "சர்வாதிகார காபுரா"வுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிடலாம். எப்படியும் இங்கு பார்லிமெண்ட் ஜனநாயக முறைக்கு ஆபத்து ஏற்படுவதை எந்தக் கட்சியும் ஆதரிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

* * *

அமெரிக்காவைச் சேர்ந்த அலாஸ்காவில் பூகம்பத்தால் பெரும்சேதமாம். இந்த நாசத்துக்கு யார் காரணம்? சந்திரனைச்சாடும் விஞ்ஞான வீரர்கள் இவ்வித விபத்துக்களைத் தடுக்க ஏதும்செய்யமுடியாதா

* * *

ஒழித்திடுமே உள்குவார்
உள்ளத்துள்ள உறுபிணியுஞ்
செறுபகையும் ஒற்றைக்கண்ணால்,
விழித்திடுமே காமனையும் பொடியாய்வீழ வெள்ளப்
புனற்கங்கை செஞ்சடை மேல்,
இழித்திடுமே ஏழுலகுந் தானாகும்மே
இயங்குந் திரிபுரங்கள் ஓரம்பினால்,
அழித்திடுமே ஆதிமாதவத்துளானே
அவனாகில் அதிகைவீரட்டனுமே.

— திருநாவுக்கரசர்.

# தென் வியட்னும் ராணுவத்துக்கு மேலும் 50,000 பேர்

## ராணுவ பயிற்சியாளர் வாபஸ் பெறுவர் என அறிவிப்பு

வாஷிங்டன், மார்ச் 30

தென்வியட்னும் ராணுவத்தில் 50,000 பேர் புதிதாகச் சேர்க்கப்படவிருப்பதாக அமெரிக்க பாதுகாப்பு மந்திரி திரு. மக்னமாரா டெலிவிஷன் பேட்டியொன்றில் கூறினர். இதற்கு 5 கோடி டாலர் செலவாகும் எனக் கூறிய அவர், தென்வியட்னுமிலுள்ள அமெரிக்க ராணுவப் பயிற்சியாளர்கள் வாபஸ் பெறப்படுவார்கள் என்ருர். ஆனல் அமெரிக்க ராணுவ ஆலோசகர்கள் அங்கேயே இருப்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

## சைப்பிரஸில் ஈஸ்டர் தினம்

### பெரிய சம்பவங்கள் இருக்கவில்லை

நிக்கோஸியா, மார்ச் 30

சைப்பிரஸிலுள்ள ஐ நா. படைத்தளபதி லெப்டினண்ட் ஜெனரல் கியானி நேற்று ஆர்ச்பிஷப் மக்காரியோஸைச் சந்தித்துப் பேசினர்.

ஈஸ்டர் தினமான நேற்று சைப்பிரஸில் சிறிய சம்பவங்களே நடைபெற்றதாகக் கூறப்பட்டது. வடமேற்குப்பகுதியில் சைப்பிரஸ்காரர்கள் துருக்கி கிராமம் ஒன்றின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். ஒரிடத்தில் 37கிரேக்கர்களை துருக்கியர்கள் சிறைப்படுத்திஞர்கள் என்றும் ஐ நா. தலையீட்டின்மீது அவர்கள் பின்பு விடுதலை செய்யப்பட்டார்கள் என்றும் அறிவிக்கப்படுகிறது.

வருகிற புதன்கிழமை சைப்பிரஸ் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுபடக் காரணமாய் இருந்த "இயோகா" ஸ்தாபனத்தின் 92-வது ஆண்டு விழாவையொட்டி கிரேக்கர்கள் ராணுவ அணிவகுப்பு நடத்தவிருக்கிருர்கள். இந்த அணிவகுப்பை ஜனதிபதி மக்காரியோஸ் பார்வையிடுவார்.

## குரோமிக்கோ - நேரு சந்திப்பு

மாஸ்கோ, மார்ச் 30

ஜெனிவா ஆயுதபரிகரண மகாநாட்டில் இந்தியாவின் பிரதிநிதியாகக் கலந்துகொள்ளும் திரு. ஆர். கே. நேரு ரஷ்ய வெளிநாட்டு மந்திரி திரு. குரோமிக்கோவைச் சந்தித்து ஆயுதப் பரிகரணம்பற்றியும் இதர முக்கிய விஷயங்கள்பற்றியும் விவாதித்ததாகக் கூறப்படுகிறது.

## குருஷ்சேவ் ஹங்கேரி பயணம்

மாஸ்கோ, மார்ச் 30

சோவியத் பிரதம மந்திரி திரு. குருஷ்சேவ், தமது வெளிநாட்டுமந்திரி குரோமிக்கோ உட்பட ஒரு தூதுகோஷ்டியுடன் ஹங்கேரிக்குச் சென்றிருக்கிருர். ஒருவாரம் அவர் அங்கு தங்குவார் என்றும், கம்யூனிஸ்ட் கட்சிகளின் மகாநாடு ஒன்றை அவர் நடத்தக்கூடும் எனவும் நம்பப்படுகிறது.

## மரண தண்டனையை நிறுத்துக

### தென் ஆபிரிக்காவுக்கு யுதாண்ட் கோரிக்கை

நியுயோர்க், மார்ச் 30

தென்னுபிரிக்காவில் சதி நடவடிக்கையிலீடுபட்டதாய்க் குற்றஞ்சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட 3 ஆபிரிக்க அரசியல்வாதிகளை விடுதலை செய்யுமாறு ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் தென்னுபிரிக்க அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிருர்.

## கைத்தொழில் ஆலை மூடப்பட்டது

புதுடில்லி, மார்ச் 30

தொழிலாளர் தகராறு காரணமாக போபாலிலுள்ள கைத்தொழில் ஆலை காலவரையறையின்றி மூடப்பட்டிருக்கிறது. 10 பேர் கைதுசெய்யபபட்டிருக்கின்றனர்.

## சிங்கப்பூரில் குண்டு வெடித்தது

சிங்கப்பூர், மார்ச் 30

சிங்கப்பூர் கடற்சுவருக்கருகே 48 மணி நேரத்தில் இரண்டாவது குண்டு ஒன்று வெடித்தது. இதனல் சொற்ப சேதமே ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

## 82பேரே மாண்டனர்

வாஷிங்டன், மார்ச் 30

அலாஸ்கா பூகம்பத்தில் மாண்டவர்கள் தொகை முன் அறிவித்தபடி நூற்றுக்கணக்கில் இல்லையென்றும் 82பேரே மாண்டனர் என்றும் 70 பேர் காயமடைந்தனர் என்றும் உத்தியோகபூர்வமான அறிக்கை கூறியது.

## ஜாம்ஷெட்பூர்

புதுடில்லி, மார்ச் 30

ஜாம்ஷெட்பூரில் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டதாய் அறிவிக்கப்படுகிறது. இரவு நேரம் மட்டுமே ஊரடங்கு உத்தரவு இனி அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டது.

## 175 சோமாலியர் மாண்டனர்?

அடிஸ்அபாபா, மார்ச் 30

எதியோப்பியா சோமாலியா எல்லையில் தொடர்ந்து நான்காவது தினமாகச் சண்டை நடைபெற்றதென்றும் இதில் 175 சோமாலியர்கள் மாண்டு, 200 பேர் காயமுற்றதாயும் அறிவிக்கப்படுகிறது.

எதியோப்பியர் தரப்பில் 18பேர் மாண்டனர் என்றும் 40 பேர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

## அரீபுக்கு டாக்டர் பட்டம்

ஹைதராபாத், மார்ச் 30

ஈராக் அதிபர் பீல்ட்மார்ஷல் அரீபுக்கு ஹைதராபாத் உஸ்மானியா பல்கலைக் கழகம் 'டாக்டர் ஆப் லாஸ்' என்ற பட்டத்தை அளித்துக் கௌரவித்தது. அவருக்களிக்கப்பட்ட வரவேற்புப் பத்திரத்தில் மறுமலர்ச்சியுற்றிருக்கும் ஈராக்கின் சின்னமாக அரீப் விளங்குவதாக வருணிக்கப்பட்டது. ஈராக்கும் இந்தியாவும் மண்டலசார்பற்ற கொள்கையின் மூலம் நேசப்பிணைப்பு கொண்டிருப்பதாயும் வரவேற்புப் பத்திரம் கூறியது.

அதிபர் அரீப் பேசுகையில் பாரதத்துக்கும் ஈராக்கிற்குமிடையே நூற்ருண்டு காலமாக இருந்துவந்த பிணைப்பை ஞாபகமூட்டினர்.

நேற்று பிற்பகல் அதிபர் அரீப் டில்லியிருந்து ஹைதராபாத் வந்தார். வழியில் அவர் தாஜ்மகாலைப் பார்த்தார்.

## வினேபாஜீ

நாகபுரி, மார்ச் 30

ஆச்சார்ய வினேபாபாவே நேற்று இங்கு நடைபெற்ற கூட்டமொன்றிற் பேசியபோது உள் அமைதியில்லாமல் எந்த நாடும் சுதந்திரத்தைப் பாதுகாக்க முடியாதெனக் கூறினர்.

## சட்டவிரோத பாகிஸ்தானியர்

ஷில்லாங், மார்ச் 30

பாகிஸ்தானியர் சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் புகுந்துவருவது மிக மோசமான விளைவுகளை உண்டுபண்டுமென்றும் இவர்களைத் திருப்பியனுப்பும் நடவடிக்கை விரைவுபடுத்தப்படும் என்றும் ஒரு வருடத்தில் இந்த வேலையை முடிவுக்குகொண்டு வரவேண்டுமென்றும் அஸ்ஸாம் நிதிமந்திரி திரு. அஹ்மத் கூறினர்.

## கிருஷ்ண நதி

பங்களூர், மார்ச் 30

கிருஷ்ண நதியை மேற்கே திருப்பிவிடுவதற்கு மைசூர் முதன்மந்திரி திரு. நிஜலிங்கப்பா எதிர்ப்புத் தெரிவித்தார். மைசூருக்கும் மகாராஷ்டிராவுக்கும் கிருஷ்ண நதித் தண்ணீர் தேவைபபடுவதாயும் கோதாவரி நதியைக் கொண்டிருக்கும் ஆந்திராவுக்கு அதிலிருந்து நீர் பெறமுடியுமென்றும் அவர் கூறினர்.

## வகுப்பு ஒற்றுமைக்கு 7 அம்சத் திட்டம்

பாட்ன, மார்ச் 30

நேற்று பாட்னவில் நகரப் பிரமுகர்களைக்கொண்ட ஒரு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வகுப்பு ஒற்றுமையைப் பாதுகாக்க 7 அம்சத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. பல இடங்களில் அமைதிக் கமிட்டிகளை அமைப்பது திட்டத்தின் ஒரு அம்சமாகும்.

## மனுபாய்ஷா

குவாய்த், மார்ச் 30

இந்திய வெளிவர்த்தக மந்திரி திரு. மனுபாய்ஷாவுக்கு குவாய்த் அரசாங்கம் நேற்று விருந்தளித்துக் கௌரவித்தது. குவாய்த் அமீரையும், பட்டத்து இளவரசரையும் மற்றும் மந்திரிகளையும் அவர் சந்தித்துப் பேசினர்.

## சம்பளம் முழுவதும் தர்மத்துக்கு

பஞ்சிம், மார்ச் 30

கோவா முதல்மந்திரி ஸ்ரீ தயானந்த பண்டோகர் பதவி ஏற்றுக்கொண்டதிலிருந்து இதுவரை ரூ. 2875.15 சம்பளமாகப் பெற்றிருக்கிருர் இந்தத் தொகை முழுவதையும் இவர் தர்மத்துக்காக செஞ்சிலுவைச் சங்கத்திடம் அளித்துள்ளார்.

தாம் வாங்கும் சம்பளத்தை எல்லாம் இவ்விதம் தர்மத்துக்கு அளித்துவிடப்போவதாக அவர் அறிவித்துள்ளார்.

## கிராமத்தை கொளுத்த முயற்சி

பட்ன, மார்ச் 30

சிங்கபூம் மாவட்டத்தில் அஸன்டாலியா என்ற கிராமத்தைக் கொளுத்த முயன்ற ஆயுதபாணிகளான ஒரு மலை ஜாதிக் கூட்டத்தின்மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதில் சிலர் மாண்டதாகத் தெரிகிறது. இக்கூட்டத்தினர் சடலங்களைத் தங்களுடன் தூக்கிச்சென்றுவிட்டதாகவும் இதனல் எத்தனை பேர் மாண்டனர் என்று தெரியவில்லை யெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஹாக்கிபோட்டி

பாட்டியாலா, மார்ச் 30

இந்தியாவுக்கும் ஜப்பானுக்குமிடையே நேற்று இங்கு நடைபெற்ற மூன்ருவது ஆண்கள் ஹாக்கிபோட்டியில் 2—0 கோல்களால் இந்தியா வெற்றி பெற்றது. இதுவரை நடைபெற்ற மூன்று போட்டிகளிலும் இந்தியாவே வெற்றிபெற்றிருக்கிறது.

# "இறுதி முடிவு இன்னும் நேருவின் கையில்தான்"

## சாஸ்திரி அறிவிப்பு

புதுடில்லி, மார்ச் 30

முக்கியமான கொள்கை பற்றிய எல்லா முடிவுகளையும் இன்றும் திரு. நேருவே செய்து வருகிருர் என்றும், ஆனல் நேருவுக்கனுப்பப்படும், சகல தஸ்தாவேஜுகளும் தமது மூலமாகவே அவருக்குச் செல்கின்றன என்றும், தாம் அவை சம்பந்தமாக சிபார்சுகள் மட்டுமே செய்து வருவதாயும் திரு. லால்பகதூர் சாஸ்திரி பத்திரிகை நிருபர் விருந்தொன்றில்பேசும் போது கூறினர்.

"வெளிநாட்டு விவகாரம் சம்பந்தமான தஸ்தாவேஜுகளே இவற்றில் பெரும்பாலானவை. திரு. நேருவுக்குத் தொந்தரவு அளிக்க நான் விரும்பவில்லை. எனினும்இறுதி முடிவு அவராலேயே செய்யப்படுகிறது" என்றும் சாஸ்திரி கூறினர்.

உச்சி மகாநாட்டுக்கு முன் நடைபெறவிருக்கும் வெளிநாட்டு மந்திரிகள் மகாநாட்டிலும், காமன்வெல்த் பிரதம மந்திரிகள் மகாநாட்டிலும் இந்தியாவின் சார்பாக யார் கலந்து கொள்வார்கள் எனக் கேட்கப்பட்டது.

"எனக்குக் கொஞ்சம் தெரியும். ஆனல் இரண்டு வாரம் அல்லது ஒரு மாதத்திற்குப் பின் பிரதமரை கேளுங்கள்" என்ருர் சாஸ்திரி.

இந்தியா மண்டலசார்பற்ற கொள்கையிலிருந்து நழுவிச் செல்கிறது என்ற கூற்றை அவர் மறுத்தார். "எங்கள் கொள்கை அப்படியே இருக்கிறது" என்ருர்.

# எம். ஆர். ஏ. நாடகக் கோஷ்டி

## இலங்கை வர அனுமதி இல்லை

கொழும்பு, திங்கள்

எம். ஆர். ஏ. எனும் தார்மீக புனருத்தாரண இயக்கத்தைச் சேர்ந்த 70 பேரடங்கிய நாடகக் குழுவினர் இவ்வாரம் இலங்கை வந்து, கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் "அண்டவெளிப் பயங்கரம்" எனும் நாடகத்தை நடத்த ஏற்பாடாகி இருந்தது.

ஆனல் அக்குழுவினர் இலங்கையிலே தங்கள் செலவுக்கான பணத்தைத் தாங்களே கொண்டுவரவேண்டுமென்ற செலாவணிக் கட்டுப்பாடு நிபந்தனை காரணமாக அவர்களது விஜயம் ரத்துச் செய்யப்பட வேண்டி ஏற்பட்டதென்று வரவேற்பு சபையின் சார்பாக திரு. தேவார் சூரியசேன வருத்தத்துடன் அறிவிக்கின்ருர்.

திரு. ராஜ்மோகன் காந்தி அனுப்பியுள்ள ஒரு செய்தியில் இச்சமயம் அழகான இலங்கைக்குத் தாங்கள் வரமுடியாதுபோனமை பற்றி வருத்தம் தெரிவித்து, பின்னர் தக்க சமயத்தில் வரும் பாக்கியம் கிடைக்குமென்றே எதிர்பார்ப்பதாயும், மக்கள், குடும்பங்கள், சாதி, கிழக்கு, மேற்கு இவற்றினிடையே வெறுப்பை ஒழிப்பதே உண்மை சமாதானத்தின் இரகசியமென்பதை உலகுக்குக் காட்டும் பெரும் பேறு இலங்கைக்குக் கிடைக்குமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

# ஜனநாயகத்துக்கு இன்னும் ஆபத்து நீங்கவில்லை

## ஹைட் பார்க்கில் டட்லி பேச்சு

கொழும்பு, வெள்ளி

"நமது சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் அனைவரும் விழிப்புடனிருக்க வேண்டும் நமது ஜனநாயகத்துக்கு ஏற்பட்டுள்ள ஆபத்து இன்னும் நீங்கவில்லை" என திரு. டட்லி சேனநாயக்கா ஹைட்பார்க்கில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசியபோது குறிப்பிட்டார்.

கவர்னர்ஜெனரலுக்கு ஞானசீகதேரோ எழுதிய கடிதம் பற்றியும் திரு. கலுகல்லே நள்ளிரவு ராணி மாளிகைக்குச் சென்றதுபற்றியும் இம்மாதம் 14-ம் திகதி டாக்டர் என். எம். பெரேரா பிரதமரிடம் சென்றது குறித்தும் டட்லி குறிப்பிட்டார்.

"கடந்த 35 ஆண்டுகளாக சர்வஜன வாக்குரிமை மூலம் நமக்கு விரும்பிய அரசாங்கத்தை நிலைநாட்டவும் நமக்குச் சரியானவகையில் செயலாற்ருத அரசாங்கத்தை தேர்தல்மூலம் வீழ்த்தவும் உரிமை பெற்றிருக்கிரேம். ஒரு சர்வாதிகாரியின்கீழ் இந்த நாட்டை வைப்பதன் அபாயம்பற்றி எங்கள் கட்சி எச்சரித்திருக்கிறது.

திறமையின்மை, ஊழல் ஆகிய காரணங்களினல் தற்போதைய அரசாங்கம்நாட்டை வருந்தத்தக்க நிலைமைக்கு உள்ளாக்கிவிடும் என பலமுறை எடுத்துக் காட்டியிருக்கிரேம் இப்போது இது நிரூபிக்கப்பட்டிருக்கிறது" என்றும் திரு. டட்லி கூறினர்,

## பட்லருக்கு சிகோனுக் கடிதம்

லண்டன், மார்ச் 30

கம்போடிய அதிபர் இளவரசர் நரோடம் சிகோனுக பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி திரு. பட்லருக்கு ஒரு கடிதம் அனுப்பியிருப்பதாக அறிவிக்கப்பட்டது. கடிதத்திலுள்ள விஷயத்தை வெளியிட திரு. பட்லர் மறுத்துவிட்டார்.

## பண்டாரவளையில் பிரதமர்

பண்டாரவளை, திங்கள்

நேற்று இங்கு வந்துசேர்ந்த பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவுக்கு பெருவாரியான மக்கள் வரவேற்பு அளித்தனர். நகர எல்லையில் பண்டாரவளை எம். பி. திரு. ஜே. ஜி. குணசேகரா பிரதமரைவரவேற்ருர்.

பிரதமர் இங்கு மக்கள் வங்கிக் கிளையைத் திறந்துவைத்தார். நிதிமந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன, திரு. டபிள்யு. பி. ஜி. ஆரியதாச ஆகியோரும் இவ் வைபவத்தில் கலந்துகொண்டனர். மஹிள சமிதி, காந்த சமிதி ஆகிய பௌத்த ஸ்தாபனங்களும் பிரதமருக்கு வரவேற்பளித்தன.

## கைமோசக் கொலைகள்

கொழும்பு, திங்கள்

கடந்த 4 வாரங்களில் 31 கைமோசக் கொலைகளும், 27 மரண விபத்துக்களும் பொலிஸ் தலைமைக் காரியாலயத்தில் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன. இவ்வாண்டு இதுவரை 132 கைமோசக் கொலைகளும், 86 மரண விபத்துக்களும் ஏற்பட்டிருக்கின்றன.

## போட்டியிலிருந்து விலகினர்

ஊர்காவற்றுறை திங்கள்

புங்குடுதீவு கிராமசபைத் தேர்தலில் 7-ம் வட்டாரத்தில் போட்டியிடும் தற்போதைய 8-ம் வட்டார அங்கத்தவரான திரு சி. சிவசம்பு தம் போட்டியிலிருந்து விலகிவிட்டதாக அறிவித்துள்ளார்.



# மாணவர் மலர்



## தொழிற் புரட்சி

-ஆ. செல்வநாயகி-

உலக்கை தேய்ந்து உழிப் பிடியானாற் போன்று ஓடாய்த் தேய்ந்து மெய்வருந்தி உழைத்த மனிதனுக்கு 18-ம் நூற்றாண்டு வரப்பிரசாதமான நூற்றாண்டாகும். இந்த நூற்றாண்டில் தொழிற்புரட்சி தோன்றியதே இதற்குக் காரணமாகும். தொழிற் புரட்சியின் தாயகம் இங்கிலாந்தாகும்.

தற்காலம், விஞ்ஞான வளர்ச்சியிலே தோன்றிய இரும்புக் காலமாகும். மனிதன் தனது மூளையைத் தேய்ந்து போகா வண்ணம் வளர்த்து விஞ்ஞான அடிப்படையிலே தோன்றிய தொழிற் புரட்சியாகிய ஒரு நன் மரத்திற்கு நீரூற்றி வளர்த்துவிட்டான்.

தொழிற் புரட்சியிலே சமுதாயத்தில் பற் பல மாறுதல்கள் நேர்ந்தன, அதனுடன் பல நன்மைகளும், தீமைகளும் நிகழ்ந்தன.

இயந்திரப் பெருக்கம் காரணமாகக் கூலிவேலை செய்து வாழ்ந்த மக்கள் மேலும் வறுமையினாலே வாடி வதங்குகின்றனர். தொழிற் புரட்சியைக் கண்டு இன்புற்ற மனிதன், இப்புரட்சி ஏன் தோன்றியது என்று சில சமயங்களில் துன்பமுறுகின்றான். மேல் நாடுகளில் மட்டுமன்றி கீழ் நாடுகளிலும் கூட விஞ்ஞான வளர்ச்சியினாலே ஏற்பட்ட தொழிற் புரட்சி எல்லைமீறி வளர்ந்து ஆக்கவேலைகளையும் அழிவு வேலைகளையுங் கூடச் செய்தவண்ணமே இருக்கின்றது.

# விசித்திர மனிதன்!

மகான்

இன்ஸ்பெக்டர் பிருன்சிஸின் அந்தத் திடீர் வார்த்தைகளைக் கேட்டதும் ஷகான் ஒரு க்ஷண நேரம் மௌனமாகவிருந்துவிட்டு, இன்ஸ்பெக்டரை நோக்கினர்.

'உங்களுக்கு எத்தனை மணிக்கு இத்தகவல் வந்தது? எங்கிருந்து?' என்று கேட்டார் ஷகான்.

'நீங்கள் வருவதற்கு சுமார் ஐந்து நிமிடங்களுக்கு முன்னர்......அதாவது 8-05-க்கு இத்தகவல் டெலிபோன் மூலம் வந்தது. உடனடியாக நான் எனது 'ஜீப்பையும்' மூன்று பொலிஸ் கான்ஸ்டபிள்களையும் அனுப்பினேன். விஷயம் உண்மைதான் என்று அவர்கள் டெலிபோன் செய்தார்கள். உங்களுக்குத் தெரிவித்துவிட்டு அங்கு செல்லலாமென்று நினைத்தேன்......' என்று இன்ஸ்பெக்டர் பிருன்சிஸ் கூறி முடிப்பதற்குள், துப்பறிவாளர் ஷகான் குறுக்கிட்டு; ஏன் இன்ஸ்பெக்டர்...... நீங்களே முதலில் சென்று பார்த்திருந்திருக்கலாமே என்றார். இன்ஸ்பெக்டர் அதற்கொன்றும் சொல்லவில்லை.

"ஆமா...டெலிபோன் மூலம் இத்தகவலை உங்களுக்கு யார் சொன்னது?" என்று ஷகான் கேட்டதற்கு; ஒரு பெண்ணின் குரல். ஆனால் பழகிய குரலாகத் தெரியவில்லை என்றார் இன்ஸ்பெக்டர் பிருன்சிஸ். இதற்குள் 'ஜீப்' தயாராகிவிடவே, இருவரும் கொலை நிகழ்ந்த இடத்துக்குச் செல்வதற்காக 'ஜீப்புக்குள் ஏறினர்கள். ஷகானின் உள்நோக்கத்தை ஓரளவு அறிந்த இன்ஸ்பெக்டர் பிருன்சிஸ்; "ஆமாம்......மாஜிஸ்திரேட்டுக்கு ஆள் அனுப்பிவிட்டோம். மேலும் அவர்கள் எல்லோரும் அங்கு காத்து நிற்பார்கள் என்றே நினைக்கின்றேன். என்றார் 'ஜீப்' நல்ல வேகத்தில் மிகக் கவனமாகப் போய்க்கொண்டிருந்தது.

4

ஓரளவு ஜனநடமாட்டம் குறைந்த சந்திரா வீதியின் ஆரம்பத்தில் கம்பீரமான தோற்றத்துடன் நின்றுகொண்டிருந்த ஆலமரத்தின் கீழ், சோமன்-கொலையுண்ட சங்கரலிங்கம்பிள்ளையின் வளர்ப்பு மகன் மாண்டுகிடந்தார். அவரின் முதுகிலிருந்து இரத்தம் பீறிட்டு வழிந்தோடி பெரிய இரத்தக் குளமாக அவ்விடம் காட்சியளித்தது. சோமன் துப்பாக்கிச் சூட்டுக்குத்தான் பலியாகி இருக்கின்றார் என்பது தெளிவாகப் புலனாகியது. இரவு நேரமாகவிருந்த பொழுதிலும் மின்சார வெளிச்சத்தினால் அந்த இடம் பகல்போல் காட்சியளித்தது.

பொலிஸார் பலத்த காவல் புரிந்தனர், மாஜிஸ்திரேட் கட்டளையில் விசாரணைகள் ஆரம்பமானது. டாக்டரும், புலகப்பட நிபுணர்களும் மற்றும் சில அதிகாரிகளும் அங்கு நின்றனர். கட்டுக் கடங்காத மக்கள் கூட்டத்தைச் சமாளிப்பதில் மட்டும், ஐந்து பொலிஸ்காரர்கள் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். சிலநிமிட நேரத்தின் பின்னர்.- கண்ணோட்டத்தின் பின்னர் துப்பறிவாளர் ஷகான் இன்ஸ்பெக்டர் பிருன்சிஸிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு அங்கிருந்து சென்றுவிட்டார். அவரை ஏற்றிச் சென்ற 'ஜீப்' சங்கரா பவனத்தில் போய் நின்றது. அப்பொழுது நேரம் இரவு 8-40

சங்கரா பவனத்தின் முன் ஹோலுக்குள் நுழைந்த ஷகானை, அழுது புலம்பிக் கொண்டிருந்த தேவிகா மேலுமிரண்டு கண்ணீர்த்துளிகளை பூமாதேவிக்கு அர்ப்பணம் செய்துவிட்டு...... "ஸார்......" என்று கேவி யழுதவாறே வரவேற்றார். தேவிகாவுக்கு விஷயத்தை சொல்லி அவரைத் தேற்றவேண்டுமென்று நினைத்து ஓடோடிவந்த ஷகானுக்கு ஏற்பட்டது......தோல்விதான். அழுதுகொண்டிருந்த தேவிகாவுக்கு ஆறுதல் கூறிவிட்டு... 'ஆமா உங்கள் அண்ணன் எங்கே?' என்றார் ஷகான். "அண்ணன் எங்கேயோ போய் விட்டு எட்டு மணிக்குத்தான் ஸார் இங்கு வந்தார். சோமண்ணன் இறந்த செய்தியை நான் சொன்னதும் அங்கு தான் போய்விட்டார்" என்றார் தேவிகா.

'சோமனின் மரணம் பற்றி உங்களுக்கு யார் சொன்னது' என்று ஷகான் கேட்டதும், 'டெலிபோன் மூலம் தகவல் கிடைத்தது ஸார். உங்களுக்கு உடன் டெலிபோன் பண்ணினேன் பொலிஸுக்கும் டெலிபோன் செய்தேன். ஆனால் உங்களையோ அல்லது இன்ஸ்பெக்டர் பிருன்சிஸையோ டெலிபோன் மூலம் சந்திக்கமுடியவில்லை' என்றார் தேவிகா.

'ஓ...கோ...அப்படியென்றால், இது திட்டமிடப்பட்ட சதிதான்' என்று வாய்விட்டே கூறினர் துப்பறிவாளர்ஷகான். அடுத்த நாட்காலை வந்து சந்திப்பதாகச் சொல்லிவிட்டு நேரே வீட்டுக்குப்போனார்; தேவிகாவின் கார் அவரை ஏற்றிச் சென்றது.

★

ஷகான் தனது விட்டு முன் ஹோலுக்குள் நுழைந்ததும்; 'யாரும் எனக்கு டெலிபோன் செய்தார்களா?' என்று வெங்கடாசலத்திடம் கேட்டார்.

"ஆமா ஐயா தேவிகா என்ற பெயருடைய பெண்ணும் இன்னுமொருவரும் டெலிபோன் செய்தார்கள்" என்றான் வேலைக்காரன் வெங்கடாசலம், மற்றவர் யாராக விருக்கலாம் என்று யோசித்த ஷகானை ஒரு 'அழைப்பு' தடுத்து நிறுத்தியது. ஷகானின் டெலிபோன் அலறிக்கொண்டிருந்தது.

(தொடரும்)

## நல்வாக்கு

பிறர்க்கொருவன் கொடுப்பதெல்லாம் தனக்கே கொடுத்துக் கொள்ளுகின்றான். இவ்வுண்மையை அறிந்தால் எவர்தான் கொடாதிருப்பான்?

(பகவான் ரமணர்)

பகைவனிடம் பகையாகவோ சிநேகிதனிடம் சினேகமாகவோ, புத்திரர் சுற்றத்தார் ஆகியோரிடம் பரிவாகவோ இருக்க முயற்சிக்காதே. எல்லோரிடமும் சமநோக்குடன் நடப்பாயாக.

(ஆதி சங்கரர்)

மிகைபட உண்போனுக்கும் உணவற்றோனுக்கும் யோகமில்லை. அதிகம் உறங்குபவனுக்கும் அதிகம் விழித்திருப்பவனுக்கும் யோகம் கைகூடுவதில்லை.

(பகவத்கீதை)

அறத்தைக் காத்தவனை அறங்காக்கும். அறத்தைக் கொன்றவனை அறம் கொல்லும்.

(உபநிஷத்)

தொகுப்பு: ஐங்கரன்

## நமது டயறி

நான்கு தினங்களுக்கு முன்னர் அமெரிக்க ராஜ்யமான அலாஸ்காவில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியினால் ஒரு நகரம் முற்றாக அழிந்துபோனதும், நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழந்ததும் உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். இச்சந்தர்ப்பத்தில் உங்களுக்கு பல ஆண்டுகளுக்கு முன்னரும் அண்மைக்காலத்திலும் நிகழ்ந்த பெரும் பூமியதிர்ச்சிகளையும் அதனால் ஏற்பட்ட உயிர்ச்சேத விபரங்களையும் தருகின்றோம்.

முறையே எந்த ஆண்டில் என்ன மாதத்தில் எத்தனையாம் திகதியில் எங்கு பூமியதிர்ச்சி ஏற்பட்டதென்பதையும் அதற்கு பலியானவர்களின் தொகைகளையும் தருகின்றோம். படித்து விட்டுப் பயப்படாதீர்கள்!

| | | | | |
|---|---|---|---|---|
| 1290 | செப். | 27 | சீனு | 1,00,000 |
| 1293 | மே. | 20 | ஜப்பான் | 30,000 |
| 1532 | ஜன. | 26 | போர்த்துக்கல் | 30,000 |
| 1556 | ஜன. | 24 | சீனு | 8,30,000 |
| 1667 | நவ. | 17 | கொகேஸியா | 80,000 |
| 1693 | ஜன. | 11 | இத்தாலி | 60,000 |
| 1737 | அக். | 11 | இந்தியா | 3,00,000 |
| 1755 | ஜூன் | 7 | பேர்ஸியா | 40,000 |
| 1755 | நவ. | 1 | போர்த்துக்கல் | 60,000 |
| 1783 | பெப். | 4 | இத்தாலி | 50,000 |
| 1797 | பெப். | 4 | உகேடர் | 41,000 |
| 1819 | ஜூன் | 16 | இந்தியா | 1,543 |
| 1828 | டிச. | 28 | ஜப்பான் | 30.000 |
| 1896 | ஆக. | 26 | உகேடர் | 70,000 |
| 1875 | மே. | 16 | வெனிசூலா | 16,000 |
| 1897 | ஜூன் | 12 | இந்தியா | 1,542 |
| 1898 | ஜூன் | 15 | ஜப்பான் | 22,000 |
| 1906 | ஏப். | 16 | வல்பறைஸோ | 1,500 |
| 1906 | ஏப். | 18 | கலிபோர்னியா | 452 |
| 1907 | ஜன. | 14 | கிங்ஸ்டன் | 1,402 |
| 1908 | டிச. | 28 | இத்தாலி | 75,000 |
| 1915 | ஜன. | 13 | இத்தாலி | 29,970 |
| 1920 | டிச. | 16 | சீனு | 1,80,000 |
| 1923 | செப். | 1 | ஜப்பான் | 1,43,000 |
| 1932 | டிச. | 26 | சீனு | 70,000 |
| 1935 | மே. | 31 | இந்தியா | 60,000 |
| 1939 | டிச. | 27 | துருக்கி | 23,00,20 |
| 1950 | ஆக. | 15 | இந்தியா | 1,500 |
| 1951 | மே. | 6 | எல்சல்வடோர் | 400 |
| 1953 | பெப். | 12 | ஈரான் | 530 |
| 1953 | மார்ச். | 18 | துருக்கி | 1,201 |
| 1953 | ஆக. | 11—16 | கிரீஸ் | 420 |
| 1955 | ஏப். | 1 | பிலிப்பைன்ஸ் | 435 |
| 1956 | ஜூன் | 10—17 | வட.ஆப்கானிஸ்தான் | 2,000 |
| 1956 | நவ. | 4 | ஈரான் | 350 |
| 1957 | ஜூலை | 2 | வட ஈரான் | 1,500 |
| 1957 | ஜூலை | 28 | மெக்ஸிக்கோ | 67 |

## விஞ்ஞான புதுமைகள்

— தி. புருஷோத்தமன் —

டெலிவிஷன் விஞ்ஞான உலகில் ஒரு புதுமையாகும். டெலிவிஷனை கண்டுபிடித்தவர் ஜோன்லோகி பெயர்டு என்னும் விஞ்ஞானியாவர். தற்போது மேல் நாடுகளில் 500 ரூபாய் விலையுள்ள டெலிவிஷனை அவர் ஐந்து ரூபாய் அடக்கவிலையில் 1925-ல் தயாரித்தார். 1932-ல் சுமார் 10,000 டெலிவிஷன் கருவிகள் உபயோகத்திலிருந்தன.

சாதாரணமாக வீடுகளில் காணப்படும் எவர்சில்வர் பாத்திரங்களை செய்ய உதவும் எவர்சில்வரைக் கண்டுபிடித்தவர் 'ஹாரி பிரியர்லி' என்பவராகும். இவர் 1913-ம் ஆண்டு துப்பாக்கி செய்ய ஒரு நல்ல கலப்பு உலோகத்தைத் தேடினர். இதற்காக இவர் பல உலோகக் கலவைகளைத் தயாரித்தார். இவற்றில் ஒன்று தான் எவர்சில்வர். இதையே ஹாரிபிரியர்லி தேர்ந்தெடுத்தார். இதில் 8 சதவிகிதம் குரோமியம் கலந்திருந்தது.

பேனை முனையில் ஆஸ்மியம், இரேடியம் என்ற இரு உலோகம் தான் வைககப்படுகிறது.

குளோரோபாரத்தைஜேம்ஸ் சிம்ப்ஸன் என்ற மருத்துவர் முதன் முதலில் தயாரித்து அஞ்சா நெஞ்சத்துடன் தானே அந்த ஆவியை இழுத்துப் பரிசோதித்தார். ஆனால் இவர் இறக்கவில்லை.

பாறைகளைப் பிளக்கும் டைனமெற்றைக் கண்டுபிடித்தார் ஆல்பிரெட் நோபல். ஏராளமாகப் பணம் குவிந்தது. அச்செல்வத்தைக்கொண்டு ஒரு பரிசுத்திட்டத்தை ஏற்படுத்தினர். இதுவே நோபல் பரிசு என வழங்கப்படுகிறது. இது விஞ்ஞானம், இலக்கியம் மருத்துவம் முதலிய துறைகளில் வல்ல ஒரு நிபுணருக்கு அளிக்கப்படும் மாபெரும் புகழ் வாய்ந்த பரிசாகும்.

## மூளைக்கு வேலை

கடந்த வாரம் நான் கேட்ட கேள்விக்கு. எதிர்பார்த்ததைவிட குறைவாகவே விடைகள் வந்தன. அதிலும் சரியான விடைகள்...! சென்ற வாரக் கேள்வியின் சரியான விடை இதுதான். "குறிப்பிட்ட நபர் யாராகவிருக்கலாம். எங்கே, எப்போது இவரை சந்தித்தேன" என்றுதான் நடேஷ் யோசித்தான்.

பின்வருபவர்கள் ஓரளவு சரியாக விடையெழுதியிருக்கின்றனர் இவர்களுக்கு எனது பாராட்டுதல்கள்.

ஆசீர்வாதம் வின்ஸ்லோஸ், சுன்னாகம்; வி. என். கேசவமூர்த்தி, மயிலிட்டி வடக்கு; கு. முருகானந்தம், சங்கானை கிழக்கு; ரவிசேகர், அளவெட்டி; கே. ரவீந்திரன், வைத்தீஸ்வரா, யாழ்ப்பாணம்; ம. நாகேந்திரன், மானிப்பாய் இந்துகல்லூரி; ச. பிரான்சிஸ்கா, கொக்குவில்; சி. யோகேஸ்வரி, மகளிர் உயர்நிலைப் பாடசாலை, பண்டத்தரிப்பு.

### கேள்வி மண்டலம்

விமானக் கம்பெனியொன்று நடத்திய போட்டியில் முதல் பரிசு சேகருக்கு கிடைத்தது. பரிசு என்ன தெரியுமா? இலங்கையிலிருந்து லண்டனுக்கு இலவச விமானப் பிரயாணம். அதுவும் ஜெட் விமானத்தில்!

குறிப்பிட்ட தினம் வந்தது. என்றுமே வெளிநாடுகளுக்கு சென்றிராத சேகர் அன்று லண்டன் விமான நிலையத்தை அடைந்தான். விமான நிலையத்தில் இறங்கியதும் அவன், முக்கியமாக ஒன்றைப் பார்த்தான். அவனுக்கு பெரும் திகைப்பையளித்தது. நவீன காட்சிகளும், விமான நிலையமும், வெள்ளையர்கள் நடமாட்டமும் அவனுக்குத் திகைப்பைக் கொடுக்கவில்லை. ஆனால் சேகர் வசமிருந்த 'ஒன்றுதான்' அவனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. அது என்ன!

இதற்காக உங்களை நான் லண்டனுக்குப் போகும் படி சொல்லவில்லை. யோசித்துப் பார்த்து பதிலை அனுப்புங்கள். உங்களின் விடைகள் சனிக்கிழமைக்கு முன்னர் எமக்கு கிடைக்கவேண்டும். விலாசம்: மாணவர் மலர், "ஈழநாடு" த. பெ. 49, யாழ்ப்பாணம்.

சாந்தா

## வானொலிநிகழ்ச்சிகள்

### செவ்வாய் 31-3-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவசற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 சேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஸ்ரீ லங்கா குறுக்கெழுத்துப்போட்டி, 7-00 இருபது கேள்விகள், 7-30 சித்திரம் — திசை கடந்த இசை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 நேயர்விருப்பம், 9-45 நாகஸ்வரம் — எம். கே. பரமசிவம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-30 இசைக்கோவை, 7-45 ரேடியோ செய்திமலர், 8-15 தேரழுந்தூரில் நடைபெறும் கம்பன் விழா பற்றிய ரேடியோ வர்ணனை.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 திரைப்பட இசை, 1-30 வாத்தியஇசை, 1-50 குரல்இசை, 2-10 வேலை வாய்ப்புகள், 2-30 டி. பி. ரத்னகுமாரி — பாட்டு, 2-40 பொன்னெளிர்பாரதம் — தொடர்நிகழ்ச்சி.

மாலை 5-15 வாத்திய கோஷ்டிஇசை, 5-45 இசைப் பயிற்சி.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 அரசியல் அறம், 7-45 கும்பகோணம் ராஜமாணிக்கம்பிள்ளை, எல். கணபதியாபிள்ளை — வயலின், தஞ்சாவூர் ஆர். ராமமூர்த்தி — மிருதங்கம், 9-15 மெல்லிசை, 9-30 புகழ் கூண்டு — நாடகம், 9-45 வேதநாயகன்பிள்ளை — பாடல்கள், 10-00 டி. பி. ரத்னகுமாரி — பாட்டு.

## அலங்கார உற்சவம்

ஊர்காவற்றுறை, திங்கள்

புங்குடுதீவு - மடத்துவெளி ஸ்ரீ பாலசுப்பிரமணிய தேவஸ்தான இவ்வருட அலங்கார உற்சவம் அடுத்த மாதம் 2-ந் திகதி தொடக்கம் 11-ந் திகதி வரையும் நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது.

திருவிழா நாட்களில் அகில இலங்கைப் பொது சன சேவைச் சங்கத்தினர் தினமும் சைவப்பிரசங்கம் நிகழ்த்துவதற்கும் நல்லூர் பஜனைக் குழுவினர் விசேட கூட்டுப் பிரார்த்தனை நடத்துவதற்கும் ஏற்பாடாகியுள்ளது.

ஆசிரியர் திரு.வி க.ஆறுமுகம் கந்தபுராண கதாப்பிரசங்கம் பக்கவாத்திய சகிதம் நிகழ்த்துவார் எனவும் அறிவிக்கப் படுகிறது.

## தமிழ்மறைத் தேர்வு

கொழும்பு, திங்கள்

தமிழ் மறைக் கழகம் நடத்தும் அகில இலங்கைத் தமிழ் மறைத் தேர்வு இவ்வாண்டு ஜூன் மாதம் 20-ந் திகதி நடைபெறும்.

முன்னர் விண்ணப்பங்களை அனுப்பாதவர்கள் மே மாதம் முதல் திகதிக்கு முன்னர் தங்கள் விண்ணப்பங்களைத் தமிழ் மறைக் கழகத்துக்கு அனுப்புதல் வேண்டுமென அறிவிக்கப்படுகிறது.

தமிழ் மறைக் கழகத்தின் பதின்மூன்ருவது மகாநாடு மே மாதம் 24, 25, 26-ந் திகதிகளில் நடைபெறும்.

## கி. ச. தேர்தல்கள்

ஊர்காவற்றுறை, திங்கள்

தீவுப்பகுதிகளில் பின்வரும் திகதிகளில் கிராமசபைத் தேர்தல்களை நடத்த யாழ்ப்பாணம் தேர்தல் காரியாலயம் உத்தேசித்து இருப்பதாக அறியபபடுகிறது. இதற்கான அறிவித்தல்கள் விரைவில் அறிவிக்கப்படும் எனவும் தெரிகிறது.

எபரல் 15-ல் அல்லைப்பிட்டி, 16-ல் வேலணை, 18-ல் நயினதீவு, 22-ல் புங்குடுதீவு, 11-ல் நெடுந்தீவ.

## டிக்கெட்டில்லா பிரயாணம்

### தினம் ரூபா 25000

### இ. போ. சபைக்கு நஷ்டம்

கொழும்பு, திங்கள்

டிக்கெட்டின்றி பிரயாணம் செய்பவர்கள் மீது சரியான கவனம் செலுத்தாதது காரணமாக இ. போ. ச. தினம் ஒன்றுக்கு ரூ 25000 நஷ்டமடைந்துவருவதாக அறிவிக்கப்படுகிறது.

20 மோட்டார் சைக்கிள்களை வாங்கி திடீர்ச் சோதனைக் குழுவைப் பலப்படுத்துவதற்காக ஒரு வருடத்திற்கு முன் விண்ணப்பிக்கப்பட்டதென்றும், ஆனல் இன்னும் இது பற்றி எந்தவிதப் பதிலும் கிடைக்கவில்லையென்றும் இ. போ. ச. வட்டாரங்கள் கூறின.

திடீர்ச் சோதனைக் குழுவைப் பலப்படுத்த வேண்டுமென்பது இங்கு வந்த இந்திய நிபுணர் குழுவின் சிபார்சாகும்.

டிக்கெட்டின்றி பிரயாணம் செய்பவர்களின் தொகை அதிகரித்திருக்கிறதென்றும், குறிப்பாக வெளியூர்களில் இது அதிகமென்றும்கூறப்படுகிறது.

# சோஷலிஸம் வெற்றிபெற செனட்டர் கூறும் வழி!

பேராதனை, திங்கள்

தென்னிலங்கையில் பார்லிமெண்ட் தேர்தல் தொகுதியொன்றில் வட இலங்கையைச் சேர்ந்தவர் ஒருவரும், வட இலங்கையில் தென்னிலங்கையைச் சேர்ந்தவர் ஒருவரும் தெரிவு செய்யப்படும் தினம்தான் இலங்கையில் சோஷலிஸம் வெற்றி பெறும் தினமாகும்" என்று செனட்டர் ஜே. பி. ஜெயசேன, உடுநுவரையில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

உடுநுவர எம். பி திரு. டி. பி. ஜயசுந்தராவின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் செனட்டர் ஜயசேன தொடர்ந்துபேசுகையில் லங்கா சமசமாஜக்கட்சியிலா, கம்யூனிஸ்ட் கட்சியிலா சேருவது என்று மக்கள் சிந்தித்துக் கொண்டிருந்த சமயத்தில் காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு, ஆர். டி. பண்டாரநாயக்கா ஆபத்பாந்தவராக வந்தாரென்று கூறினர். லங்கா சமசமாஜக் கட்சியோ, கம்யூனிஸ்ட் கட்சியோ ஆட்சிக்குவந்தாலும் சர்வாதிகாரம் ஏற்பட அனுமதிக்கப்படமாட்டாதென்றும் அவர் கூறினர். காலஞ்சென்ற பிரதமர் பெற்றுத்தந்த சுதந்திரத்தை இழந்துவிடக்கூடாதென்றும் அவர் சொன்னர்.

## ஐ. நா. மத்யஸ்தர்

நியுயோர்க், மார்ச 30

சைப்ரஸில் ஐ. நா. மத்தியஸ்தராக நியமிக்கப்பட்டிருக்கும் திரு. சகாரி தொமியோஜா, தலைமைக் காரியதரிசி யுதாண்டுடன் சம்பாஷிக்கும் பொருட்டு நியுயோர்க் சென்றிருக்கிருர்.

## "ஈழத்தில் . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இறுதிவரை அமைதியுடனிருந்து பார்த்துச்செல்வர் மக்கள். இவரிடம் பயிற்சிபெற்ற நடிகர்களை ஈழத்தின் எந்தப் பாகத்திலும் காணலாம். எப்பொழுதும் தம் மாணவரைப் பற்றியே பெரிதாகப்பேசுவார். அவர்களுடைய நடி யுத்திறலையே பாராட்டுவார். தம்மைப்பற்றிப் பெருமையாய்ப் பேசிக்கொள்வது கிடையாது.

கலையரசு சொர்ணலிங்கம் நாடகத்துறையிற் சிறந்து விளங்குவதற்குத் தோன்ருத் துணையாக இருப்பவர் அவருடைய மனைவியேயாகும். ஒரு நடிகனுக்கு மனைவியாகவாய்த்தவள் படும் இன்னல்களோ பல. கணவனுக்கு ஏற்ற மனைவியாகவும் நற் பண்புகளுக்கெல்லாம் உறைவிடமாகவும் அமைதியான இல்வாழ்க்கை நடத்தி வரும் இப் பெண்ணின் பெருந்தன்மைக்கு நாடக உலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

எழுத்தாளரிடையேயும் கலைஞரிடையேயும் பொருமையும் நிந்தனையும் தாண்டவமாடும் இக்காலத்திலே குணங்களின் நிறைவாக கலையரசு விளங்குகிருர். கலைஞரையும் நடிகரையும் நாடகத்தயாரிப்பாளரையும் அவர்கள் இருக்குமிடம் தேடிச்சென்று பாராட்டுவதும் அவர்களைப் பாராட்டும் விழாக்களிற் கலந்துகொள்வதும் இவரின் நற்பண்புக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. ஈழத்திலே நாடக உலகிற்குத் தனிப்பெரும் புகழைத் தேடித்தந்துள்ள கலையரசு சொர்ணலிங்கம் தமிழ்பேசும் மக்களின் நன்றிக்கு உரியவர். கலையரசு உடல்நலமும் உள்ள உரமும்சிறக்கப்பெற்று மேலும் பல்லாண்டு கலைத்தொண்டு புரியவேண்டும்.

கலையரசு சொர்ணலிங்கத்தின் கலைப்பணியைப்பாராட்டி பல கலைமன்றங்களும் பொது ஸ்தாபனங்களும் பாராட்டுப் பத்திரங்கள் வழங்கின. பலர் சேவைநலனைப் பாராட்டிப் பேசினர். கலைநிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெற்றன.


### வரி விளம்பரம்

#### அரைச்சலார்

அநேக மக்களின் ஆதரவு பெற்ற சுன்னுகம் "பிறின்ஸ்" புகைப்பட ஸ்தாபனத்தார் 10-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 25-4-64 வரை அரைச்சலார். 62

#### விற்பனைக்கு

நல்ல நிலைமையில் உள்ள 6 வோல்ற் பற்றறிகள் விற்பனைக்கு உண்டு. முருகன் எலக்றிக்கல் ஸ்ரோர்ஸ, 6/8, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 78

#### ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சை விசேட பயிற்சிகள் 1964

ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம் முதலிய பாடங்களுக்குரிய தீவிர பயிற்சி வகுப்புகள் ஆனைப்பந்தியடி உயர் கலைக் கல்லூரியில் 1-4-64 முதல் ஆரம்பமாகும். விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.

84 — மனேஜர்.

#### ரேடியோ

வாங்கவோ, விற்கவோ பழுதுபார்க்கவோ, சிறந்த இடம்.

S. கலைமான்கண்டு & பிரதர், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 55

#### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற பரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50, வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாயபிள்ளையார் கோவலடி யாழ்ப்பாணம்


## மாநகரசபை . . .

(1-ம் பக்கந் தொடர்ச்சி)

டில் தாக்கல்செய்துள்ள வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரதிவாதிகளில் ஒருவரான மாநகரசபை அங்கத்தவர் திரு. கே. வி. தெய்வேந்திரம் நீதிமன்றத்திற்கு வராததால அவர் மீது மாஜிஸ்ரேட் வாரண்ட் பிறப்பிக்க உத்தரவிட்டார்.

திரு. ஏ. டி. துரையப்பாவுக்கு மீண்டும் சமன்ஸ் வழங்குமாறு உத்தரவிட்ட நீதிபதி விசாரணையை மே மாதம் 18-ந் திகதி ஒத்திவைத்தார்.

## சீஸன் டிக்கட்டிலும் சிங்களம்!

கொடிகாமம், திங்கள்

பாடசாலை மாணவர்களுக்கு புகையிரதப்பகுதியினரால் வழங்கப்படும் சீஸன் டிக்கட்டுகளிலும் தற்பொழுது சிங்களம் இடம்பெற்றுள்ளது. மாணவரின் பெயரும், மாதமும் மட்டுமே சிங்களமொழியில் எழுதப்பட்டிருக்கிறது.

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் சீஸன் டிக்கட்டுகளில்மட்டுமே சிங்களம் இடம்பெற்றுள்ளதாகவும், பொது மக்களுக்கு வழங்கப்படும் சீஸன் டிக்கட்டுகளில் ஆங்கிலமே இடம்பெற்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

கண்டி, திங்கள்

மல்வத்தை மகாநாயக தேரோ வண. அமுனுகொட ராஜகுரு ஸ்ரீ விபாசி இன்றும் நாளையும் அனுராதபுரத்துக்கு உத்தியோக ரீதியில் விஜயம் செய்கிருர். நாளை அவர் 29,000 குடியேற்றவாசிகள் வசிக்கும் பதவியா குடியேற்றத் திட்டத்திற்கு விஜயம்செய்வார்.





ஒரே சுகந்தமுள்ள சோப்பும் டல்க்கும் பாவித்தலே முறையானது. கோயாவின் சுகபோக சோப்பும், வியர்வை துர்நாற்றத்தையும் போக்க வல்ல உலகிலேயே மிக மிருதுவான, மென்மையான டல்க்கும், இவ்வாறு சேர்த்து பாவிப்பதற்கு மிக சிறந்தவை.

ஒவ்வொரு நாளையும் பரிமள புத்துணர்ச்சியுடன் துவங்க, கோயாவின் சுகந்த என்டைஸ் பாவியுங்கள். அதன் இனிய நறுமணம் நாள் முழுவதும் உங்கள் உடலை சூழ்ந்து நிற்கும்.




மற்றும் லவ் எப்பேர் பாஸ்போர்ட் ப்ளாக் ரோஸ் கார்டீனியா நம்பர் 5 சுகந்தங்களிலும் கிடைக்கும்.

கோயா ● லண்டன் ● பாரீஸ் ● நியு யோர்க்

46

# மொழிவழிபிரிந்த தொழிற் சங்கங்களின் சம்மேளனம்

நல்லூர், செவ்வாய்

யாழ்ப்பாணத்தில் மேதின விழா என்றுமில்லாத வகையில் பிரமாண்டமானதாக நடத்தப்படவிருக்கின்றது. இதற்கான ஏற்பாடுகளை இப்பகுதியிலுள்ள தொழிற்சங்க நிர்வாகிகள் மேற்கொண்டுவளனர்.

இலங்கை தொழிற் சங்க சம்மேளன யாழ்ப்பாணக் கிளை மேதினத்தன்று தொழிலாளர்களின் பெரிய ஊர்வலத்தையும் பகிரங்கக் கூட்டத்தையும் நடத்த உத்தேசித்துள்ளது.

தமிழரசுக் கட்சிக்கு அனுசரணையாக உள்ள மொழிவழி பிரிந்த தொழிற்சங்கங்களின் சம்மேளனம் ஒன்று மேதினத்திற்கு முன்னர் உருவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் பொறுப்பேற்று நடத்தியது குறிப்பிடத்தக்கது.

அரசாங்கதுறை, தனியார் துறைகளில் உள்ள தமிழ் தொழிலாளர்களை உள்ளடக்கி அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம், தமில் பேசும் அரசாங்க ஊழியர் சங்கம், துறைமுக நாவாய் இயக்குநர் சங்கம், தமிழ் ஆசிரியர் சங்கங்கள், வர்த்தக ஊழியர் சங்கங்கள் என்பன கூட்டாக யாழ்ப்பாணத்திலும் திருமலை, மட்டக்களப்பிலும் மே தினத்தைக் கொண்டாட ஏற்பாடுகள் செய்து வருகின்றன. யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை தொழிலாளர் கழகத்தின் யாழ்ப்பாணக்கிளை இப்பகுதியிலுள்ள பல தொழிற் சங்கங்களையும் மேதினவிழாவில் கலந்துகொள்ளும்படி கேட்டுள்ளது.

# 'பாட்டா' விற்பனை நிலையம்
## யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம், செவ்

'பாட்டா' ஸ்தாபனத்தார் தயாரிக்கும் கால் அணிகள் இன்று இலங்கையிலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் உபயோகப்படுத்தப்படுகின்றன. நேர்த்தியான, நாகரிகமான சொகுசான கால் அணிகளைத் தயாரிப்பதுடன் மலிவான விலையில் சாதாரண மக்கள் வாங்கக்கூடியதாக இருப்பதாலேயே இதனை உபயோகிக்க எல்லோரும் விரும்புகின்றார்கள். இத்தகைய கால் அணிகளைத் தயாரிக்கும் ஒரு ஸ்தாபனத்தார் யாழ்ப்பாணம ஐக்கிய வியாபாரச் சங்கத்தினரோடு தொடர்புகொண்டுள்ளது இங்குள்ள எல்லோருக்கும் மகிழ்ச்சி தருவதாக இருக்கிறது.

யாழ்ப்பாணம் ஐக்கியவியாபாரச் சங்க கட்டிடத்தில் பாட்டா ஸ்தாபனத்தாரின் விற்பனை நிலையத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் முன்னாள் வைத்திய அத்தியட்சகரும் யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச்சங்க நிர்வாகிகள் சபைத் தலைவருமான டாக்டர் கே. கனகரத்தினம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நேற்று மாலை 4-30 மணிக்கு நடைபெற்ற இத்திறப்பு விழாவில் பாட்டா ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களும் மற்றும் பல பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

டாக்டர் கனகரத்தினம் மேலும் பேசுகையில் 'பாட்டா' ஸ்தாபனத்தாரின் விற்பனை நிலையத்தை யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்க கட்டடத்தில் திறப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொண்ட சங்கத்தின் நிர்வாக டைரக்டர் திரு. கனகசபைக்கு நாம் எமது நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம் என்றும் இந்த ஏற்பாட்டினுல் இங்குள்ள பொதுமக்கள் மிக்க பயன் அடைய வழி வகுக்கப்பட்டுள்ளதென்றும் குறிப்பிட்டார்.

பாட்டா ஸ்தாபனத்தார் தமது நல்ல தயாரிப்புகளால் தமது ஸ்தாபனத்துக்கு நல்ல மதிப்புத்தேடிக் கொண்டுள்ளார்களென்றும் அவர் கூறினர்.

பாட்டா ஸ்தாபனத்தாரின் 93-வது விற்பனை நிலையமான இதில் பலவிதமான கால் அணிகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. எத்த இடத்திலும் காலணிகள் ஒரே விலையிலேயே விற்பனைசெய்யப்படுவதாகவும், இரத்மலானையிலுள்ள பாட்டா தொழிற்சாலையில் ஒவ்வொரு 8 மணித்தியாலத்திலும் 10,000 சோடி காலணிகள் தயாரிக்கப்படுவதாகவும் பாட்டா ஸ்தாபன விற்பனை மனேஜர் திரு. ஏ. துரைரத்தினம் நமது நிருபருக்குத் தெரிவித்தார்.

# கிரிக்கெட் போட்டி நடைபெறவில்லை

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணம் பாடசாலைகள் தெரிவுக் கோஷ்டிக்கும் மலேயா பல்கலைக்கழக கோஷ்டிக்குமிடையே நேற்றும் இன்றும் யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதாகவிருந்த கிரிக்கெட் விளையாட்டுப்போட்டி தவிர்க்க முடியாத காரணங்களால் நடைபெறமுடியாமற் போய்விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

# மாஜி மந்திரி சதிசெய்கிறார்
## குருநாகல் எம். பி. குற்றச்சாட்டு

குருநாகல், திங்கள்

1956-ம் வருடம் பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த அரசியல் கட்சியைச் சேர்ந்த முன்னாள் மந்திரியொருவர் அமெரிக்காவின் உதவியுடன் இங்கு சர்வாதிகார ஆட்சியை அமைக்க முயற்சிசெய்கிறார் என்று குருநாகல் எம். பி. திரு. ஜயாபத்திரான இங்கு ஒரு கூட்டத்தில் பேசுகையில் குற்றம்சாட்டினர்.

மாஜி மந்திரிக்கு அமெரிக்க அரசாங்கத்துடன் நெருங்கிய தொடர்பு இருக்கிறதென்றும் தென்கிழக்காசிய நாடுகளின் விவகாரங்களில் அமெரிக்க கடற்படையின் ஏழாவது அணி தலையிடுவதும் தனது கூற்றுக்கு ஆதாரமாகுமெனவும் திரு. பத்திரான கூறினர்.

இக்கூட்டத்தில் பேசிய பொல்காவல எம். பி. திரு. ஸ்டீபன் சமரக்கொடி, மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பறிக்கும் எந்த முயற்சியையும் தாம் இறுதிவரை எதிர்ப்பதாகக் கூறினர்.

# சிவனொளிபாதத்தில் 15000 யாத்திரீகர்

மஸ்கெலியா, திங்கள்

கடந்த வெள்ளிக்கிழமை சிவனொளிபாத யாத்திரீகர்களின் தொகை 15000 ஆக அதிகரித்தது.

# 'ஸ்ரீ' பிரச்னை..

(1-ம பக்கத் தொடர்ச்சி)

போன்று இங்கு வலுப்பெற்ற பிரயாணிகள் சங்கமில்லையென்றும் இது ஒரு குறையென்றும் கூறிய அவர்கள் பஸ் சேவையில் இங்கு அரசியல் வாதிகளின் தலையீடு இல்லாதது திருப்தியளிப்பதாகவும் கூறினர்.

றீகல் (யாழ்ப்பாணம்)
REGAL — JAFFNA
NOW SHOWING
Daily at 4-45, 7-00 & 9-45 p. m.
Morning Shows
Sats & Suns at 10-30 a. m.
THE DAY
THE EARTH
CAUGHT FIRE
(Cinemascope) 81

ஐ. நா. சபையில்

# குறைபாடுகளை தெரிவிக்க தனிநபருக்கு உரிமைவேண்டும்'
## மனித உரிமை சாஸனம்பற்றி உடுப்பிட்டி எம். பி. உரை

யாழ்ப்பாணம், செவ்

மனித உரிமை மறுக்கப்படுவதாக கருதும் தனிப்பட்ட ஒருவரோ அல்லது ஒரு குழுவோ, தங்களின் குறைபாடுகளை ஐக்கிய நாடுகள்சபைக்கு எடுத்து செல்லக்கூடிய உரிமையளிக்கப்படவேண்டும் என்று உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் நேற்று மாலை யாழ்ப்பாணத்திலுள்ள அமெரிக்க செய்தி ஸ்தாபனத்தில் மனித உரிமை சாசனம் பற்றி பேசும்போது கூறினர்.

மாவட்ட நீதிபதி திரு. என் சிவஞான சுந்தரம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. சிவசிதம்பரம் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:- சாதாரண மனிதன் உரிமை என்ன வென்பதை அறியவேண்டியது மிகவும் அவசியம். 15 வருடங்களுக்குமுன் ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமை சாஸனம் நிறைவேற்றப்பட்டது. இந்த சாஸனத்தில் 30 உரிமைகள் அடங்கியுள்ளன. சரித்திரத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது 15 வருடம் மிகவும் குறைவாக காணப்பட்டபோதிலும் . உலகத்திலுள்ள அநேக நாடுகள் துரிதமாக முன்னேறியிருக்கின்றன.

தென் ஆபிரிக்காவில் நீக்கிரோக்களுக்கு உரிமைமறுக்கப்பட்டுவருகின்றது. நீக்கிரோக்களுக்கு சகல உரிமையும் அளிப்பதில் ஈடுபட்ட கென்னடி தன்வாழ்க்கையையே அதற்காக அர்ப்பணித்தார். மனிதன் எப்பொழுது சிந்திக்க ஆரம்பித்தானே அப்பொழுதே உரிமை பற்றியும் சிந்திக்கலானன். சமயத்தைப்பொறுத்த வரையிலும் சரி அரசியலைப் பொறுத்தவரையிலும்சரி மனித உரிமையையடைவதற்கு நீண்டதூர பிரயாணம் செய்யவேண்டியிருக்கிறது. உலகத்தில் சமமாகப் படைக்கப்பட்ட எல்லா மக்களுக்கும் எல்லாவற்றிலும் சமசந்தர்ப்பமளிக்க வேண்டும்.

மனித உரிமைசாஸனத்தை உருவாக்குவதில் திருமதி ரூஸ்வல்ட் அதிகபங்கெடுத்துக்கொண்டார். இதற்காக நியமிக்கப்பட்ட கமிட்டி சுறுசுறுப்பாக வேலை செய்தது. 48 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ம் திகதி ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமை சாஸனத்தை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது. எந்த நாடும் இதற்குஎதிர்ப்பு தெரிவிக்கவில்லை. ஆனால் சோவியத் ரஷ்யா, தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகள் வாக்களிப்பில்கலந்து கொள்ளவில்லை. இந்த சாஸனத்தை ஐக்கிய நாடுகள் சபை ஏற்றுக்கொண்ட பின்பும் பல நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையில்சேர்ந்துகொண்டன. இதன் மூலம் ஐக்கிய நாடுகள்சபை அங்கீகரித்த மனித உரிமை சாஸனத்தையும் இந்நாடுகள் ஏற்றுக்கொண்டன. ஆனால் மனித உரிமைகளை நிலைநாட்ட ஐக்கிய நாடுகள் சபை போதிய முறைகளை கையாளாதது துர்ப்பாக்கியமே.

தென் ஆபிரிக்காவில் அதிகமானோருக்கு உரிமை மறுக்கப்படுகிறது. இங்கே நடவடிக்கை எடுத்தால் சபையிலிருந்து வெளியேறுவதாக தென்-ஆபிரிக்கா பயமுறுத்துகிறது. இவ்விஷயம் 54ம் ஆண்டு சபையில் விவாதத்திற்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது தென் ஆபிரிக்கா வெளிநடப்பு செய்தது. மனித உரிமைகளை நிலைநாட்டக் கூடிய வழிவகைகளையறிந்து அதன்படி செயலாற்ற வேண்டும்.

திரு: கனகசுந்தரம் நன்றியுரை கூறினர். இறுதியில் திரைப்படம் ஒன்றும் காண்பிக்கப்பட்டது.

தமிழ், சிங்கள

# ஆசிரிய பயிற்சி கலாசாலையில் இட விஸ்தரிப்பு
## அதிக ஆசிரியர்களை பயிற்றுவிக்க கல்வி இலாகா திட்டம்

கொழும்பு, திங்கள்

தமிழ் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளிலும் சிங்கள ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளிலும் அதிக ஆசிரியர்கள் பயிற்சி பெறுவதற்கு வகை செய்யுமுகமாக இடவசதிகளை விஸ்தரிக்க கல்வி இலாகா திட்டமிட்டுள்ளது.

இதற்கிடையே கண்டியிலுள்ள முஸ்லிம் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையை சிங்கள ஆசிரிய பயிற்சிக் கலாசாலையாக மாற்ற வித்தியாதிபதி முடிவுசெய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வித முடிவுக்கு முக்கிய முஸ்லிம் ஸ்தாபனங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. கண்டி முஸ்லிம் ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் பயிற்சி பெற்றுவந்த சகல முஸ்லிம் மாணவர்களுக்கும் அட்டாளைச்சேனை முஸ்லிம் பயிற்சிக் கலாசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

கல்வி இலாகா எடுத்துள்ள மதிப்பீட்டின்படி 3207 இஸ்லாமியர் ஆசிரியர்களில் 2111 ஆசிரியர்களே பயிற்சிபெற்றுள்ளார்கள்.

அரசாங்க பாடசாலைகளிலும் அரசாங்கத்தினுல் பொறுப்பேற்கப்பட்ட பாடசாலைகளிலும் 13,243 தமிழைப் போதனை மொழியாகக் கொண்ட ஆசிரியர்கள் இருக்கிறார்களென்றும் இவர்களில் 5296 பயிற்சிபெற்ற ஆசிரியர்களென்றும் கல்வி இலாகாவின் மதிப்பீட்டின்படி தெரியவந்துள்ளது.

# துப்பாக்கிகள் மறைகின்றன

கொழும்பு, திங்கள்

அரசாங்க அதிபர்கள், துப்பாக்கி லைசன்ஸுகளை புதிப்பிப்பதில் தீவிர குறைப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டது காரணமாக பெரும்பாலான துப்பாக்கிகள் தலைமறைவாகியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. மேற்கு மாகாணத்தில் 5000-க்கு மேற்பட்ட துப்பாக்கிகளுக்கு லைசன்ஸ புதுப்பிக்க மறுக்கப்பட்டது. ஆனல் இவற்றில் பெரும்பாலானவை அதிகாரிகளிடம் திருப்பி ஒப்படைக்கப்படவில்லை.

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனி வீதி)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணு (திருகோணமலை)
விஜிதா (ஹட்டன்) மொடேர்ன் (பதுளை) வெம்பிளி (கண்டி)
கல்யாணி (நாவலப்பிட்டி)

எம். ஜி. ராமச்சந்திரன்—பி. சரோஜாதேவி
எம். ஆர் ராதா—டி. ஆர். ராஜகுமாரி
எஸ். ஏ. அசோகன்—நாகேஷ்
மற்றும் பலர் நடித்த

ஆர். ஆர். பிக்சர்ஸ்

பெரிய இடத்துப் பெண்

டைரக்ஷன்: ராமண்ணு
இசை: விஸ்வநாதன் ராமமூர்த்தி
பாடல்கள்: கண்ணதாசன்
கதை-வசனம்: சக்திகிருஷ்ணசாமி

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரல் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.